தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-4-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மிளகாய் வற்றலின் விலை விவசாயிகளை மகிழ்விக்கும்

இந்தியாவில், வாசைன மற்றும் நறுமணப் பயிர்களின் மொத்தப் பரப்பளவில் , மிளகாய் வற்றல் சுமார் 26 சதவீதம் பங்களிக்கின்றது. தேசிய தோட்டக்கலை வாரியம் 2017-18 ஆம் ஆண்டின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, மிளகாய் வற்றல் 8.44 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 21.06 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அறியப்படுகிறது. ஆந்திரபிரதேசம், தெலுங்கானா, மத்தியபிரதேசம், மேற்கு வங்காளம், கர்நாடகா, ஒடிசா, குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை மிளகாய் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்கள் இணைந்து மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் 89 சதவீதம் பங்களிக்கின்றன. மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் ஆந்திரபிரதேசம் மட்டுமே 53 சதவீதம் பங்களிக்கின்றது.

இந்தியாவின் மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் 75 சதவீதம்நம் நாட்டிலேயே உபயோகப்படுத்தப்படுகிறது. மிளகாயின் ஆக்ஸிஜனேற்ற மற்றும் மருத்துவ குணங்கள் காரணமாக ஊட்டச்சத்து மருந்து தொழிற்சாலைகளில் மிளகாய்க்கு எப்போதும் அதிக தேவைகள் உள்ளன. சீனா, இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து அதிக ஏற்றுமதி தேவைகள் இருந்து வருவதாலும், வர்த்தகர்களின் அதிக கொள்முதல் நோக்கத்தாலும், ஆந்திரபிரதேசத்தில் வைரஸ் நோய் தாக்கத்தால் உற்பத்தி குறைந்துள்ளதாலும், மிளகாய் பயிர் உற்பத்தி செய்யும் சில பகுதிகளில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டதாலும் மற்றும் முன் பேர சந்தையில் மிளகாய் வர்த்தகத்திற்கான தற்காலிக தடை ஆகியவற்றாலும் வரும் மாதங்களில் மிளகாய் வற்றல் விலை அதிகரிக்கவாய்ப்புள்ளது. மத்தியபிரதேசத்திலிருந்து வரும் மிளகாய் ஆந்திரபிரதேச மிளகாய் போன்று தரமானதாக இருப்பதில்லை.

தமிழ்நாட்டில், அக்டோபர்-நவம்பர் மாதங்களில் மிளகாய் பயிரிடப்படுகின்றது. சம்பா மற்றும் முண்டு வகை இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலிஆகிய மாவட்டங்களில் மிளகாய் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. தமிழ்நாட்டின் சில பகுதிகளில் தற்போது மிளகாய் பயிரிடும் விவசாயிகள் தாமதமான மற்றும் நீடித்த பருவமழையின் காரணமாக மக்காச்சோளத்தைப் பயிரிட்டுள்ளனர். எனவே, மிளகாய் சாகுபடிபரப்பு இயல்பான அளவைவிட தற்போது குறைவாகவே உள்ளது. உள்ளூர் வரத்து ஏப்ரல் முதல் வாரத்தில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் அறுவடை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் - விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 17 ஆண்டுகளாக திருநெல்வேலி சந்தையில் நிலவிய மிளகாய் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போதுதரமான (சம்பா) மிளகாய் வற்றலில் சராசரி பண்ணை விலை குவிண்டாலிற்கு ரூ. 8500/-முதல் ரூ.9000/- வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. குண்டூர் வர்த்தகர்களின் இருப்பிலிருந்து பெறப்படும் மிளகாய் வற்றலைப் பொருத்து விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசைன மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422 -6611284

மக்கள் தொடர்பு அலுவலர்